| | |
|---|---|
| அ.வ.எண். | 47/2012 |
| பெயர் | அய்யன்துரை |
| தந்தை பெயர் | மகாலிங்கம் |
| சாட்சி | வா.சா.2 |
| நாள் | 29.08.2019 |

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்து மேட்டூர் முதல் சேலம் வரை செல்லும் மெயின் ரோட்டிற்கு தெற்கே உள்ளது என்றால் ஆமாம். கிழபுரம் உள்ள முதல் பாகம் 4 ம் வாதி சுப்ரமணியத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம். அந்த நிலத்தை அவர்தான் அனுபவித்து வருகிறாரா என்றால் ஆமாம். அதற்கு மேற்கே 2 ம் பிரதிவாதியான வெங்கடாஜலத்திற்கு பாகம் ஒதுக்கப்பட்டது. அந்த 2 ம் பிரதிவாதியிடமிருந்து தான் 1 ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம். அந்த பாகத்திற்கு மேற்கே தான் என்னுடைய பாகம் என்றால் ஆமாம். அதற்கும் மேற்கே தான் 1 ம் வாதி ராஜேந்திரனின் பாகம் உள்ளது என்றால் ஆமாம். மேற்படி 4 பாகங்களும் வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் ஏற்பட்டது என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ல் கண்டுள்ள செக்குபந்தி அடிப்படையில் தான் அனுபவித்து வருகிறோமா என்றால் 3 பேரின் நிலத்திற்கு தெற்குபுறம் 12 அடி வண்டிப்பாதை உள்ளது. அதில் தண்ணீர் மற்றும் ஆடுமாடுகள், வண்டிவாகனங்கள் செல்லும் பாதையாக உள்ளது. வழக்கு சொத்திற்கும் தெற்கே எனக்கு நிலம் உள்ளதா என்றால் உள்ளது. அதன் சர்வே எண் என்னவென்றால் என்னால் சரியாக ஞபாகம் வைத்துக்கொள்ளமுடியவில்லை. கிணறு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்பது என்றால் பார்த்து தான் கூறமுடியும். கிணறு 50 வருடங்களாக உள்ளது. அதற்கான மின் இணைப்பு மற்றும் ஆயில் இஞ்சின் உள்ளதா என்றாலும், பயன்பாட்டில் உள்ளதா என்றாலும் இல்லை. வாரி உள்ளது. ஏற்றம் வைத்து தண்ணீர் இறைத்து வருகிறோம். நாங்கள் 20 வருடங்களாக என்னுடைய தகப்பனார் காலத்திலிருந்து தண்ணீர் இறைத்து விவசாயம் செய்து வருகிறோம். தற்போது தண்ணீர் உள்ளதா, விவசாயம் செய்து வருகிறோமா என்றால் விவசாயம் செய்து வருகின்றோம். வழக்கு சொத்திற்கு தெற்கே வண்டிப்பாதை உள்ளது என்பதை நிரூபிக்க ஆணையாளரை நியமிக்க கோா மனுதாக்கல் செய்துள்ளேனா என்றால் மனு தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், அவ்வாறு நீதிமன்ற ஆணையாளர் நியமித்தால் பாதையில்லை என்பது தெரிய வந்துவிடும் என்பதற்காக ஆணையாளரை நியமிக்கும் மனுவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 42 சென்ட் 4 ம் வாதிக்கு பிரிந்தது என்றால் ஆமாம். 2 ம் பிரதிவாதிக்கு 43 சென்ட் ஒதுக்கப்பட்டது

என்றால் அதில் தான் கிணறு மற்றும் பாதை உள்ளது. அதனை கொடுத்துவிட்டோம். அதனை கழித்துதான் வாங்கியிருக்கவேண்டும். எனக்கு 41 சென்ட் பிரிந்தது என்றால் ஆமாம். 1 ம் வாதிக்கு 42 சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம். எல்லோரும் இருக்கும் இடத்தை தான் பிரித்துக்கொண்டோம். அதில் தடம் உள்ளது. 2 ம் பிரதிவாதியிடமிருந்து 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு பாகபிரிவினையில் ஒதுங்கிய சொத்தை தான் கிரையம் வாங்கினார் என்றால் ஆமாம். 1 ம் பிரதிவாதி முத்தன் மகன் கந்தன் என்பவருக்கு 2 கிரையபத்திரங்கள் மூலம் 42 சென்டை விற்பனை செய்துவிட்டார் என்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே கந்தனுக்கு விற்பனை செய்த நிலையில் கந்தனை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் பாதை குறித்து பிரச்சினை செய்யும் போது 3 ஆண்டுகள் கழித்து தான் எங்களுக்கு தெரிய வந்தது. அதற்குபின்னர், தெரிய வந்ததற்குபின்னிட்டும் கந்தனை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் ஆமாம். நான் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் உரிய தரப்பினரை சேர்க்கவில்லை என்ற காரணத்திற்காக வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. நான்கூறுவது போல் வழக்கு சொத்திற்கு தெற்கே வண்டிப்பாதையும், நிலையில் கிணறும், இல்லை என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி 42 சென்டை விற்பனை செய்ததுபோக உள்ள 1 சென்டை அபகரிக்கதற்காக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.